# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 10 - 2017

- அன்னை தெரசாவின் நீல நிற பட்டை கொண்ட வெள்ளை நிற சேலைக்கு "டிரேட் மார்க்" (Trade Mark) என்னும் வர்த்தக முத்திரை பதிவு பெற்றுள்ளது. சட்டவிரோதமாக பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் காணாமல் போன 1000 குழந்தைகளை கண்டுபிடிக்கும் புன்னகையை தேடி என பொருள்படும் "முஸ்கான் ஆப்பரேஷன்" துவக்கப்பட்டுள்ளது. ஜூலை 31 வரை ஒரு மாதம் இந்த ஆபரேஷன் நடக்கிறது.

- ஜூலை 2017-ல் Avian Influenza (H5N8 and H5N1) எனும் நோய் தாக்குதலற்ற நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது.

- இங்கிலாந்து நாட்டில் அதிக அளவு முதலீடு செய்யும் நான்காவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. சமீபத்தில் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டுள்ள அந்நாட்டின் 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதியாண்டிற்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களில் அமெரிக்கா, சீனா மற்றும் பிரான்ஸ் நாடுகள் உள்ளன.

- டாட்டா எ∴கு நிறுவனமான (TISCO), 2014-15 மற்றும் 2015-16 ஆண்டுக்கான "சிறந்த செயல்திறன் கொண்ட ஒருங்கிணைந்த எ∴கு ஆலை"-க்கான பிரதமரின் கோப்பையை தொடர்ந்து 3 வது முறையாக வென்றுள்ளது. இந்நிறுவனம் சிறந்த ஒருங்கிணைந்த எ∴கு ஆலை என 12 முறை அங்கீகரிக்கப்பட்டு 10 முறை வென்றுள்ளது.

- இந்திய தேசிய துப்பாக்கிச்சங்கத்தின் (NRAI) தலைவராக ரணிந்தர் சிங் அடுத்து வரும் 4 ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் பஞ்சாப் முதல்வர் கேப்டன் அமரீந்தர் சிங்கின் மகனாவார்

- போயிங் 777 ரக விமானத்தை இயக்கிய முதல் இளம்பெண் கமாண்டர் என்ற சாதனையை ஆந்திரபிரதேசத்தை சேர்ந்த கேப்டன் அனி திவ்யா (30 வயது) பெற்றுள்ளார்.

❖ “ஜிக்யாஷா” (Jigyasa) மாணாக்கர் - அறிவியலறிஞர்கள் இணைப்புத் திட்டம் மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனமும் (Council of Scientific and Industrial Research (CSIR)) கேந்திர வித்யாலாயா சங்கேதனமும் (Kendriya Vidyalaya Sangathan) இணைந்து செயல்படுத்தவுள்ளது. இதன் மூலம் நாடு முழுவதுமுள்ள 1151 கேந்திர வித்யாலயா பள்ளிகளும் 38 தேசிய அறிவியல் ஆய்வகங்களுடன் இணைக்கப்பட்டு ஆண்டு தோறும் ஒரு இலட்சம் மாணவர்கள் மற்றும் ஆயிரம் ஆசிரியர்கள் தேசிய அறிவியல் ஆய்வகங்களுடன் இணைந்து அறிவியல் திட்டங்களில் ஈடுபடவுள்ளார்கள்.

❖ உலகில் அதிக அளவில் மரண தண்டனைகளை நிறைவேற்றும் பட்டியலில் சீனா, ஈரான், அரேபியா மற்றும் ஈராக் நாடுகளுக்கு அடுத்தபடியாக ஐந்தாவதாக பாகிஸ்தான் இணைந்துள்ளது. பாகிஸ்தானில் மரண தண்டனைக்கு எதிரான தடை கடந்த 2014 டிசம்பரில் விலக்கிக் கொல்லப்பட்ட பிறகு கடந்த இரண்டரை வருடங்களில் 465 பேருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

❖ திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் இயக்குநர் சிகரம் கே.பாலசந்தரின் சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் போது கே.பாலசந்தர் எழுதிய தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் “அந்த நாள்” என்னும் தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

❖ உலக பாலியல் சங்க ஆலோசனை குழு உறுப்பினராக சென்னை ஆகாஷ் குழந்தையின்மை சிகிச்சை மைய இயக்குநர் டாக்டர் ஜெயராணி காமராஜ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய பெண் மருத்துவர் ஒருவர் இந்த பதவிக்கு தேர்வு செய்யப்படுவது இதுவே முதன்முறை. உலக பாலியல் சங்க ஊடகக் குழுவின் துணைத்தலைவராகவும் அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ டோக்கியோவில் நடைபெவுள்ள 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டியில் அகதிகள் அணி ஒன்றை பங்கேற்க வைக்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி முடிவு செய்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோ ஒலிம்பிக் கோட்டியில் அகதிகள் அணி ஒன்று போட்டிகளில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. பன்னாட்டு அளவில் அகதிகள் பிரச்சனையை உணர்த்தும் விதமாக இந்த புதுமையை ஒலிம்பிக் கமிட்டி செய்துள்ளது.

OXFORD IAS ACADEMY